11.	C. V. Parthasarathi.	Not out		......	6
				Extras	15
				Total	283

2nd Innings.

1.	M. O. Srinivasan	L. B. W.		Kannan	8
2.	B. Anantarama Rao	Caught	His Highness.	Gopalswami	29
3.	A. F. Wensley	Caught	Fernandez	N. Krishnamurthi.	50
4.	K. S. Kannan	L. B. W.		Perumal	9
5.	Ramdas Mardi	Caught	Kalyanam	Kannairam	47
6.	A G. Ram Singh	Did not bat.			
7.	George Abraham	C. & B.		Perumal	37
8.	Bhoopathy	Not out			20
9.	Sarangapani	Run out.			29
10.	Ranganathan	Not out			22
11.	C. V. Parthasarathi.	Did not bat			
				Extras	10
				Total	261 for 7 declared.

Bowling :— *1st Innings* : Kannairam 3 wkts. for 65 runs ; Fernandez 2 for 39 ; R. T. Parthasarathi 2 for 11 ; and N. Krishnamurthi 1 for 21.

2nd Innings : Kannairam 2 for 35 ; Perumal 2 for 54 ; N. Krishnamurthi 1 for 17 and K. Gopalswami 1 for 30.

Mofussil XI.

1st Innings.

1. Fernandez.	...	Caught	Wensely	... Kannan	... 0
2. Parthasarathi	...			... Kannan	... 0
3. His Highness the Raja.		Caught	Ranganathan.	Anantarama Rao	116
4. Kannairam	...	Caught	Mardi	... Parthasarathi.	... 36
5. Nadu Dorai	....			... Parthasarathi	... 0
6. Perumal	...	Run out.		...	1
7. Chinna Dorai	...	Caught	Kannan	... Parthasarathi	... 8
8. N. Krishnamurthi	....	Bowled		... Anantarama Rao	7
9. V. Kalyanam	....	Bowled		... Kannan	... 4
10. Dorairaj	....	Not out.		...	... 1
11. K. Gopalswami	...	Bowled		... Anantaram Rao.	0
				Extras	... 5
				Total	...178

2nd Innings.

1. Fernandez.	...	Caught	Parthasarathi.	Kannan	... 0
2. Parthasarathi	....	L. B. W.		... Anantarama Rao	30
3. His Highness the Raja.		Run out.		...	... 63
4. Kannairam	...	Caught	Wensely	... Kannan	... 14
5. Nadu Dorai	...	Caught	Abraham	... Kannan	... 12
6. Perumal	...	Stumped		... Mardi	... 29
7. Chinna Dorai	...	Bowled		... Anantarama Rao.	
8. N. Krishnamurthi	...	Caught	Wensely	... Kannan	... 9
9. V. Kalyanam	...	Not out.		...	... 12
10. Dorairaj	...	Bowled		... Mardi	... 1
11. K. Gopalswami	...	C. M. O. Srinivasan		... Kannan	... 9
				Extras	... 10
				Total	...189

Bowling :— *1st Innings:* Kannan 3 for 57; Anantarama Rao 3 for 25; C. V. Parthasarathi 3 for 33.

2nd Innings: Kannan 5 for 27; Mardi 2 for 27; Anantarama Rao 2 for 35.

Sri Brihadambal State Press, Pudukkottai. 500—19-2-48.

Nataraja (Bronze) Mangadu temple.



Sundaresvara temple, Tirukkattalai.

மகாத்மா காந்தி

மகாத்மா காந்தி இறந்துவிட்டார். ஒரு தலைமுறைக்கு மேல்பட்டகாலமாக நமக்கு வழிகாட்டியாகவிருந்த ஓர் நிர்மல மான ஜோதி மறைந்துவிட்டது. இதைவிட மகத்தான விபத்து நமது தேசத்திற்கு இதுவரை நேர்ந்ததில்லை. இந்தியா முழு வதும் இருளடைந்துவிட்டது. இவ்வளவு இருளில் கண்ணிற்கு ஒரே ஒரு கிரணம்தான் புலப்படுகிறது. அதாவது மகாத்மா அவர்கள் கையாடிவந்த அன்பு, சேவை என்ற கொள்கைகளை நாம் விடாமல் பின் பற்றுவோம் என்று நமது நாட்டார் செய்து கொண்டிருக்கும் சங்கல்பம்தான் ஒருவாறு மனதைத் தேற்று கிறது.

அன்பும் சேவையும்—மகாத்மா காந்தி அவர்கள் சம்பந்தமாக இந்த மொழிகளைப் பிரயோகித்தால் அம்மொழிகளுக்கே ஓர் தனிப்பட்ட பிரகாசம் ஏற்படுகிறது. அவருடைய அன்பிற்கு ஜாதி, மதம், வர்ணம் என்ற வரம்பு கிடையாது. அவருடைய சேவை ஓர் எல்லையில்லாத் தியாகம். அன்பிற்காக அவர் தன்னுடைய உடைமை எல்லாவற்றையும்—தனது உயிர் உள்பட—தியாகம் செய்யத் தயாராயிருந்தார். சாவு என்பதைக் கண்டு அவர் பயப்படுவதில்லை. சாவிற்கு பயப்படாமல் அலக்ஷியம் கொண்ட அநேக ஆண்களும், பெண்களும் உலகில் இருந் திருக்கிறார்கள். ஆனால் மகாத்மா ஒருவரே சாவை எதிர் கொண்டழைத்தவர். எதிர்கொண்டு அழைப்பது மட்டுமல்ல, நமது தேசத்தாருடைய ஹிருதயங்களை சுத்தம் செய்வதற்காக வெகு குரூரமான கஷ்டங்களை தானாகவே வருத்திக்கொள்ளும் இயல்புடையவர். நாள் கணக்காகவும், வாரக்கணக்காகவும் சாகும்வரை பட்டினியால் வருந்துவதைக்காட்டிலும் குரூரமான சித்திரவதை உலகில் வேறு என்ன இருக்கமுடியும்? இத்தகைய நெஞ்சழுத்தமும், தைரியமும் பார்ப்போரையும் கேட்போரையும் திணற அடித்து பிரமிக்கச் செய்கிறது. சிலுவையில் செத்துக் கொண்டிருந்த ஏசுநாதரைப் பார்த்து ரோமாபுரி ராணுவ சிப்பாய் சொன்ன பிரகாரம் "உண்மையில் இவரே கடவுளின் மகன்" என்று சொல்லலாம்:

காந்தியடிகள் இறந்துவிட்டார், ஆயினும் அவரது ஆத்மா மறையவில்லை. அது இந்நாட்டிலேயே சுற்றிவந்து நமது நாட்டினரை உற்சாகப்படுத்திவரும். அவருடைய ஆத்ம பலத்தை பெரிய சக்தியாகச் செய்து நமது நாடு முழுவதும் ஓர் வலுத்த, ஒன்றுபட்ட தேசமாக மாற்றுவதும் அல்லது சிலருக்குமட்டும் அது ஒருவழிகாட்டியாக இருந்துவருவதும் நமது கையிலிருக்கி றது. என்னிலைமையிலும், தனது ஆயுளை மகாத்மா அவர்கள் எந்தக் கொள்கைகளுக்காக அர்ப்பணம் செய்தாரோ அந்தக் கொள்கைகளை விடாமல் பின்பற்றிவரும் ஜீவநாடியான பலர் இத்தேசத்தில் இருந்து மேற்படி கொள்கைகள் மறையாமல் பாதுகாத்து வருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மாதக் குறிப்புகள்

மகாத்மா காந்தி இறந்ததினால் நாடே இருளில் ஆழ்ந்துவிட்டது. ஒரு பேடித்தன்மான தாக்குதலால் அவர் ஜனவரி௴ 30-ம் தேதி உயிர் நீத்தார். இந்த துக்ககரமான சம்பவத்தின் விபரங்கள் யாவருக்கும் நன்கு தெரியும். அவை நம் நாட்டினரின் மனதில் அமிழ்ந்து கிடக்கின்றன. ஜனவரி மாதம் 30-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு மகாத்மாஜி பிர்லாமாளிகையிலிருந்து பிரார்த்தனை மேடைக்கு வந்து கொண்டிருக்கும்பொழுது ஒரு சிறிதும் எச்சரிக்கையன்னியில் அந்த விஷமக்காரன் தன்னுடைய கைத்துப்பாக்கியை எடுத்து அவரைச் சுட்டு வீழ்த்திவிட்டான். இந்தத் தாக்குதலின் அதிர்ச்சியிலிருந்து உலகம் இன்னும் விடுபடவில்லை.

* * * * *

அந்தத் துக்ககரமான சம்பவத்திலிருந்து இந்தியா விசனக்கடலில் ஆழ்ந்திருக்கிறது. 31-ம் தேதி இந்திய மேகமண்டலம் அழுகுரல்களால் சூழப்பட்டது. டெல்லியில் கூடியிருந்த மாபெரும் கூட்டத்தினரின் கதறல்கள் காற்றில் மிதந்தன; நாடு முழுவதும் கேட்டன; ஒவ்வொரு இந்தியனின் வீட்டிலேயும் சென்று கலந்தன.

* * * * *

நாட்டிற்கு ஏற்பட்ட இம்மாபெரும் நஷ்டத்தினால் சமஸ்தான வாசிகள் அடைந்த துக்கத்தைத் தெரிவிப்பதற்காக பிப்ரவரி மாதம் 1-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நகர மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. நகரமண்டபமும் அதன் முன் வெளியும் ஜனத்திரளால் நிறைந்ததுமன்னியில் தெருக்களிலும் கூடியிருந்தது. திவான் ஸ்ரீ C. கருணாகர மேனன் அவர்கள் தலைமை வகித்தார்கள். மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அவர்கள் அடியிற்கண்ட செய்தியை அனுப்பியிருந்தார்கள்.

> "மகாத்மா காந்தியின் பெருமை ஒப்புயர்வற்றது. அவரது பெருமை அவரது வாழ் நாளிலேயே யாவரும் அறிந்து போற்றப்பட்டது. அவருடைய பிரிவு நம்மெல்லோரையும் மீளமுடியாத துன்பத்தில் ஆழ்த்திவிட்டது. சமீபத்தில் நான் அவரை நேரில் நெருங்கி தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். அவருடைய மகத்தான கொள்கைகளை நாம் பின் பற்ற முயலுவதே நாம் அவருக்குச் செய்யவேண்டிய கடமை ஆகும்."

மனதை உருக்கும் மரியாதைகள் மகாத்மாவிற்குச் செய்யப்பட்டன. கூட்டத்தில் அடியில்கண்ட கனவான்கள் பேசினர்

(1) ஸ்ரீ ராவ் பஹதூர் P. ரெங்கஸாமி நாயுடு, B. A., B. L.

2) ஸ்ரீ V. ஷண்முகம் செட்டியார், B. A., B. L.

(3) ஸ்ரீ V. கிருஷ்ணமூர்த்தி அய்யர், M. A., B. L.
(4) ஸ்ரீ F. G. நடேசய்யர்.
(5) ஸ்ரீ நீலகண்டய்யர் (கொச்சி).
(6) Rev. Mr. ஞானமாணிக்கம்.
(7) ஜனப் ஹாஜி முகமது சுல்தான் பாகவி.

இந்தியாவும் உலகமும் அடைந்த இந்த நஷ்டமானது அளவிட முடியாததாகவும், பொறுக்க முடியாததாகவும் இருக்கிறது என்று ஈ-திவான் அவர்கள் கூறினார்கள். அவருடைய வாழ் நாளிலேயே அவரது பெருமையை யாவரும் ஒப்புக்கொண்டிருப்பதினால் மகாத்மா காந்தி மற்ற மகான்களை விட உயர்ந்தவர். அவருடைய கொள்கைகளைக் கடைப்பிடித்து அவர் காட்டிய வழியே செல்வதுதான் ஒவ்வொரு இந்தியனும் அவருக்குச் செய்யும் கடமையாகும்.

இம்மாபெரும் தலைவரின் கோர மரணத்தினால் ஸமஸ்தான பிரஜைகள் அடைந்த துக்கத்தைத் தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாட்டின் தலைவருடைய சாவுக்குக் காரணமாயிருந்த பேடித்தனமான தாக்குதலைக் கண்டித்து மற்றொரு தீர்மானம் நிறைவேறியது.

* * *

மகாத்மாஜியின் மரணத்தைக் குறித்து அநேக ஸ்தாபனங்கள் அனுதாபக் கூட்டங்கள் நிகழ்த்தின. காங்கிரஸ் அங்கத்தினர்கள் காந்தி சவுக்கத்திலும், திலகர் மைதானத்திலும் பொதுக் கூட்டங்கள் நடத்தினார்கள். நகர வாசிகள் அடங்கிய ஒரு ஊர்வலம் கடையக்குடிக்குச் சென்று அந்த நாளை, உபவாசமிருப்பதிலும், பிரார்த்தனை செய்வதிலும் கழித்தார்கள். நகர சபை, வக்கீல்கள் சங்கம், இன்னும் ஸமஸ்தானத்திலுள்ள ஏனைய சங்கங்களும் கூடி தங்களுடைய அநுதாபத்தைத் தெரிவித்தார்கள். 2-ம் தேதி திங்கட்கிழமை சீப் கோர்ட் (Full Bench) கூடிற்று. சீப் ஜட்ஜ் ஸ்ரீ P. செங்கலாமி நாயுடு அவர்கள் மகாத்மாவைப்பற்றிப் புகழுரைகள் கூறி அவருடைய வாழ்க்கையினால் நாம் அடைந்த படிப்பினைகளை எடுத்துரைத்தார்.

* * *

12-ம் தேதி வியாழக்கிழமையன்று, ராமேஸ்வரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட, மகாத்மா காந்தியின் அஸ்தி அடங்கிய கலசத்தை தரிசித்து மரியாதை செய்ய, ரயில்வே ஸ்டேஷனில் ஒரு பெருங் கூட்டம் கூடிற்று. மன்னர்பிரான் அவர்களும் பிரசன்னமாயிருந்து ஒரு புஷ்பமாலையை அன்புடன் அளித்தார்கள்.

* * *

ஈ-கவர்ன்மெண்டார் அவர்கள் உத்திரவுப்படி மகாத்மாஜியின் உருவப் படம்தாங்கிய ஒரு ரதம் ராஜவீதிகளின் வழியாக ஊர்வலமாகச் சென்றது. எல்லா உத்தியோகஸ்தர்களும், ஏராளமான பொதுமக்களும் நகர மண்டபத்தில் கூடினார்கள். கீதை, குரான், பைபிள் இவைகளிலிருந்து பாராயணங்கள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கீழ் திருப்பிய துப்பாக்கிகளுடன் ரிஸர்வ் படை முன் செல்ல, பஜனை செய்துகொண்டு ஊர்வலம் தெருக்களின் வழியாகச் சென்றது. ஊர்வலம் சுமார் 11-மணிக்கு நகர மண்டபத்திற்கு திரும்பியவுடன் குழுமியிருந்தவர்கள் அடியிற்கண்ட பிரதிக்ஞையை எடுத்துக்கொண்டார்கள்.

"ஈசுவர சாக்ஷியாகவும், ஊனக்கண்ணுக்குத் தெரியாமல் நம்மைக் கண்காணித்து வரும் மகாத்மா காந்தியடிகளின் ஆத்மா சாக்ஷியாகவும் நான் அப்பெரியாருடைய கொள்கைகளான சத்தியம், அஹிம்ஸை, பரோபகாரம் இவைகளை கைக்கொள்வதாக பிரதிக்ஞை செய்கிறேன்.

மகாத்மாஜி அவர்கள் தம்முடைய வாழ்க்கையையே, மனித சமூகத்தில் பூராவும் "சகோதரபாவம் உண்டாகவேண்டும் என்ற லக்ஷியத்திற்கு அர்ப்பணம் செய்து, அக்கொள்கைக்காகவே தம்முடைய உயிரையும் தியாகம் செய்தார் என்பதை மனதில் கொண்டு, நான் இந்த நிமிஷம் முதல் என்னுடைய அந்தக்கரணத்திலிருந்து வெறுப்பு, தீமை இவைகளை அறவே ஒழிப்பேனென்று பிரமாணம் செய்கிறேன்.

என்னுடைய வாழ்நாளில் என்னால் இயன்றவரை எல்லா மதத்தினர்களுக்கும், வகுப்பினர்களுக்கும் பிரியம், நல்லெண்ணம், சகிப்புத்தன்மை இவைகளைக் காண்பிக்க முயலுகிறேன்.

இந்த பிரதிக்ஞையை நிறைவேற்ற மகாத்மா காந்தியடிகள் துணைபுரிவாராக."

* * *

12-ம் தேதி வியாழக்கிழமையன்று சமஸ்தானத்தின் சார்பிலும், 13-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று காங்கிரஸ் அங்கத்தினர்கள், மற்ற ஸ்தாபனங்கள் சார்பிலும் ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது.

* * *

கோவில்களில் அர்ச்சனைகள், அபிஷேகங்களும், மசூதி, கிருஸ்தவ கோவில்களில் பிரார்த்தனையும் நடைபெற்றன.

* * *

மகாத்மாஜிக்கு மரியாதைக்குரிய சின்னமாக 12—2—48வ உத்தர கிரியை தினத்தன்று, ஸமஸ்தானத்திலுள்ள கள்ளு, சாராய, சீமைச் சாராயக்கடைகள் எல்லாவற்றையும் மூடிவிடும்படி ஈ-தர்பாரவர்கள்

உத்தரவு செய்தார்கள். அன்றுதினம் ஸமஸ்தானம் பூராவும் மிருகவதை செய்யக்கூடாதென்றும் தடை உத்தரவு செய்தார்கள்.

* * *

ஸமஸ்தானத்திலுள்ள ஹிந்துக் கோவில்களை எல்லா ஹிந்து வகுப்பார்களுக்கும் திறந்துவிடுவதாக மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அவர்கள் விடுத்த பிரகடனமே மகாத்மா காந்தியின் நினைவிற்காக செய்யப்பட்ட காரியங்களில் எல்லாவற்றையும்விட அர்த்த புஷ்டியுள்ள காரியமாகும். ஹரிஜனங்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பார் இவர்களுக்கு ஏற்பட்டிருந்த குறைகளை அகற்றுவதற்காக இடைவிடாது பாடுபட்ட மகாத்மா காந்தியின் உத்தரகிரியை தினத்தன்று இந்த புனித சீர்திருத்தம் அமுலுக்கு வரவேண்டுமென்பது மன்னர்பிரான் அவர்களின் பிரத்யேக விருப்பமாகும். 12-ம் தேதி வியாழக்கிழமையன்று பிரகடனம் அமுலுக்கு வந்தது. ஏராளமான ஹரிஜனங்கள் பெரிய கோவில்களுக்குச் சென்று தெய்வ வழிபாடு செய்தார்கள். அரசாங்கக் குடும்பத்திற்குக் குல தெய்வமாகிய ஸ்ரீ பிரஹதம்பாள் கோவிலில் திவான் பேஷ்கார் அவர்கள் ஹரிஜனங்களை வரவேற்றார்கள்.

திருமயத்திலிருந்து அடியிற்கண்ட குறிப்பு கிடைத்திருக்கிறது:—

"முன்னேற்பாட்டின்படி, காலையில் அநேக ஹரிஜனங்கள் மஹாத்மா காந்தியின் உருவப்படத்தை தூக்கிக்கொண்டும், பஜனை செய்துகொண்டும் ரயில்வே ஸ்டேஷனுக்கு ஊர்வலமாகச் சென்றார்கள். தனுஷ்கோடிக்குச் செல்லும் ரயிலில் தனி வண்டியில் கொண்டுபோகப்பட்ட காந்திஜியின் அஸ்தியைத் தரிசனம் செய்தார்கள். மௌனத்துடன் புஷ்பங்களை அளித்து தங்களுடைய மரியாதையைத் தெரிவித்துக்கொண்டார்கள். காலையில் ஸ்நானம் செய்து, சுத்தமான உடை உடுத்தி, நெற்றியில் விபூதி, குங்குமம் இட்டுக்கொண்டனர். கிட்டத்தட்ட 400 ஹரிஜனங்கள், தாசில்தார் அவர்கள் முன் செல்ல, 11-மணிக்கு பெருமாள் கோவிலில் பிரவேசித்தார்கள். கோவில் விக்ரகங்களுக்கு புஷ்பம், தேங்காய் முதலியவை சமர்ப்பித்தனர். பிறகு, ஹரிஜனங்கள் ஊர்வலமாக சிவன் கோவிலுக்குச் சென்றனர். கோவிலுக்குப் பொறுப்பாக இருந்த ஸப்-மாஜிஸ்திரேட் அவர்கள் அவர்களை வரவேற்று, சரியாக தரிசனம் கிடைக்கவும், பிரசாதம் பெறவும் வேண்டிய உதவிகள் புரிந்தார். தாசில்தாரவர்களும் கூட இருந்து கவனித்து வந்தார். சிறிதுகூட எதிர்ப்பு அன்னியில் ஆலயப்பிரவேசம் வெற்றிகரமாக நடந்தேறியது.

பிறகு ஹரிஜனங்கள் பெருமாள் கோவிலுக்கு எதிரிலுள்ள தேசிகர் சன்னதிக்குச் சென்று தரிசனம் செய்தார்கள். பின்னர் காங்கிரஸ் கமிட்டி

யாராலும், பேட்டையார்களாலும் ஏற்படுத்தப்பட்டு கடைத்தெருவில் நடந்த கூட்டத்தில் ஹரிஜனங்கள் கலந்துகொண்டு பிரதிக்ஞை எடுத்துக் கொண்டனர்.''

* * * *

உதவி நிர்வாகி, திவான் இந்தப் பதவிகளை வகித்த ஜனுப் கான் பஹதூர் P. கலிபுல்லா ஸாஹிப் பஹதூர் அவர்களின் சேவையை சிலாகித்து ஈ-தர்பாரவர்கள் அடியிற்கண்ட அறிக்கை விடுத்திருக்கிறார்கள் :—

''ஸமஸ்தானத்தில் திவான் பதவி வகித்த ஜனுப் கான் பஹதூர் P. கலிபுல்லா ஸாஹிப் பஹதூர், M. A., B. L, தனது பதவியை 26—12—47௳ மாலை விடுத்தார். ஸமஸ்தானத்திற்கு ஒரு சோதனைக் காலமாகவும், சிரமமான காலமாகவுமிருந்தபொழுது அவர் செய்த மகத்தான சேவைகளைப் பாராட்டிப் பதிவு செய்ய ஈ-தர்பாரவர்கள் இந்த சந்தர்ப்பத்தை எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

கான் பஹதூர் 1941-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதி உதவி நிர்வாகியாக ஸமஸ்தான உத்தியோகம் ஏற்று 10—7—46-ல் உயர்ந்த பதவியாகிய திவான் பதவியை அடைந்தார். ஸமஸ்தானத்தில் தொழில் அபிவிருத்தி ஏற்பட்டது அவர் நிர்வாகத்தில் ஒரு சிறந்த அம்சமாகும்.''

* * * *

ரேஷனிங் ஆபீஸாராக இருந்த ஸ்ரீ A. சுப்பிரமணியன் காடுவெட்டியார் அவர்கள் திவானின் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஈ-தர்பார் ஆபீஸில் இப்பொழுது சீனியர், ஜூனியர் என்று இரண்டு ஆபீஸ் சூபரின்டென்டெண்டுகள் இருக்கிறார்கள்.

* * * *

சாகுபடிதார்களுக்குள்ளும் நிலச் ஸ்வான்தார்களுக்குள்ளும் மகசூலைப் பிரித்துக்கொள்ளுவதைப்பற்றி ஈ-தர்பாரவர்கள் அடியிற்கண்ட கம்யூனிகேயில் தங்களது அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் :—

''ஸமஸ்தானத்தின் சில இடங்களில் சாகுபடிதார்கள் நில ஸ்வான்தார்களுக்கு மாமூலாக ஏற்பட்ட அளவுப்படி வாரத்தைக்கொடுக்க மறுப்பதாகவும், இதுவரை அனுபவிக்கப்படாத சில உரிமைகளைக் கேட்பதாகவும் ஈ-தர்பாரவர்கள் கவனத்திற்கு வந்திருக்கிறது. இந்த விஷயத்தைப்பற்றி ஈ-தர்பாரவர்கள் ஏற்கனவே கவனித்துக்கொண்டு வருகிறார்கள். இவ் விஷயத்தின் மூலம் பொதுஜன அமைதிக்கு துன்பமோ பங்கமோ ஏற்படாதிருக்கும்பொருட்டு ஈ-தர்பாரவர்களாலோ அல்லது தகுந்த இதர அதிகாரி

யாலோ முடிவு செய்யப்படும்வரை நில ஸ்வான்தார்களும், சாகுபடிதார்களும் இதுவரை ஏற்பட்டிருக்கும் வழக்கப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று ஈ-தர்பாரவர்கள் விரும்புகிறார்கள். தவிரவும் இருதரப்பாருக்கும் திருப்திகரமாக ஈ-தர்பாரவர்கள் எல்லாவிதமான வழிகளிலும் இந்த விஷயத்தைத் தீர்த்து வைக்க பிரயத்தனப்படுவார்களென்று நிச்சயமாக நம்பலாம்."

* * * *

வருமான வரி மசோதாவை ஆலோசிக்க ஏற்படுத்தப்பட்ட தனிக் கமிட்டியார் இம்மாதத்தில் இருதடவைகள் கூடி தங்களது அறிக்கையை சட்ட சபைக்கு சமர்ப்பித்திருக்கிறார்கள்.

* * * *

சட்ட சபையின் அடுத்த கூட்டமானது மார்ச்சு மாதம் 28, 29, 30 தேதிகளிலும், ஏப்ரல் மாதம் 6, 7, 8 தேதிகளிலும் நடைபெறும் என்று ஈ-கவர்ன்மெண்டாரவர்கள் விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். பட்ஜெட் திட்டத்தை விவாதிக்க இக்கூட்டம் கூடும்.

* * * *

ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக்சங்கம், ஹிந்து மஹாசபை இவைகளைப்பற்றி பொதுமக்கள் தாங்களாகவே சட்டத்தைப் பிரயோகிக்கக்கூடாதென்றும், ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்தால் பக்கத்திலுள்ள போலீஸ் அதிகாரியிடம் தெரிவித்துக்கொள்ளவேண்டுமென்றும் ஈ-தர்பாரவர்கள் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டு ஒரு விளம்பரம் செய்திருக்கிறார்கள்.

* * * *

மதராஸ் மாகாணத்தில் மதுவிலக்கு அமுலுக்குக் கொண்டுவந்ததில் திருட்டுத்தனமாகக் குடிப்பது அதிகரித்துவிட்டது. அதை நிவர்த்திப்பதற்காக மதராஸ் கவர்ன்மெண்டார் ஏற்கனவே உள்ள தண்டனையை உயர்த்தியிருக்கிறார்கள். ஸமஸ்தானத்திற்கு மதுபானங்களைக் குடிப்பதற்காகவே வரும் ஜனங்களின் விஷயத்தில் தண்டனையை அதிகப்படுத்துவது அவசியம் என்று ஈ-தர்பாரவர்கள் கருதுகிறார்கள். இப்பொழுது அதிகப்படியான தண்டனை 6 மாதம் காவலும் ரூ 1,000 அபராதமும் ஆகும்.

மாட்சி தங்கிய
ஸ்ரீ-பிரஹதம்பா தாஸ் ராஜா ராஜகோபாலத் தொண்டைமான் பஹதூர் அவர்கள் விடுத்த
பிரகடனம்

சமூகத்தின் சில வகுப்பார்கள் ஹிந்துக் கோவில்களை உபயோகிப்பதற்கு பழக்க வழக்கத்தினாலும் அனுஷ்டானத்தினாலும் விதிக்கப்பட்டிருந்த குறைபாடுகளை அகற்றுவதை இனிமேல் தாமதப்படுத்தக் கூடாதென்ற காலம் எனது அபிப்பிராயப்படி வந்துவிட்டபடியாலும்,

மதராஸ் மாகாணத்திலும் மற்ற இந்திய சமஸ்தானங்களிலும் சமீப மாதங்களில் அவ்விதமான குறைபாடுகள் அகற்றப்பட்டிருப்பதினாலும்,

சமஸ்தானத்திலுள்ள எல்லா ஹிந்து பப்ளிக்கோவில்களெல்லாம் யாதொருவிதமான பாகுபாடன்னியில் எல்லா வகுப்பைச்சேர்ந்த ஹிந்துக்களுக்கும் திறந்துவிடப்படவேண்டுமென்றும் இதற்குப்பின் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கும் ஷரத்துக்களுடன்கூடிய இந்த பிரகட்னம் உடன் காலத்திலேயே அமுலுக்குவரவேண்டுமென்றும் நான் இதன்மூலம் பிரகடனம் செய்து கட்டளையிடுகிறேன்.

1. இந்த பிரகடனத்தின் காரியங்களுக்காக சங்கதியினாலோ அல்லது சந்தர்ப்பத்தினாலோ விரோதம் ஒன்றும் இல்லாவிட்டால்,

(1) "விலக்கப்பட்ட வகுப்பார்" என்பது நிலைநாட்டப்பட்டிருக்கும் பழக்க வழக்கம் அல்லது அனுஷ்டானத்தின்மூலம் சம்மந்தப்பட்ட கோவிலுக்குள் பிரவேசிப்பதற்கோ அல்லது அதில் தெய்வத்தினிடம் வழிபடுவதற்கோ விலக்கப்பட்டிருக்கிற ஹிந்து சமூகத்தைச்சேர்ந்த யாதொரு ஜாதி அல்லது வகுப்பு என்று பொருள்படும்.

(2) "கோவில்" என்பது எந்தப்பெயர் மூலம் அறியப்பட்டிருந்தாலும், தெய்வ வழிபாடுக்கான ஸ்தலமாக, ஹிந்து சமூகத்துக்குப் பொதுவாக அர்ப்பணம் செய்யப்பட்டுள்ள அல்லது அதன் நலனுக்கான அர்ப்பணம் செய்யப்பட்டுள்ள அல்லது அதனால் உரிமையாக உபயோகித்து வந்துள்ள ஒரு ஸ்தலம் என்று பொருள்படும். அந்த ஸ்தலத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் விக்ரஹங்களும் மண்டபங்களும் அதில் அடங்கியுள்ளது.

(3) "தெய்வ வழிபாடு" என்பது இந்த பிரகடனத்தின்கீழ் செய்யப்படும் விதிகள் அல்லது உத்தரவுகளின் பிரகாரம் தெய்வ வழிபாடு

செய்பவர்கள் செய்பக்கூடிய அல்லது பங்கெடுத்துக்கொள்ளக்கூடிய மத சம்பந்தமான சேவை என்று பொருள்படும்.

2. (1) இதற்கு மாருக எந்தச் சட்டம், பழக்க வழக்கம் அல்லது அநுஷ்டானம் இருந்தபோதிலும், விலக்கப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த நபர்கள் எந்த ஹிந்து கோவிலுக்குள்ளும் பிரவேசித்து பொதுவாக ஹிந்துக்களைப்போல் அதே முறைப்படியும் அதே அளவுப்படியும் அங்கு தெய்வத்தினிடம் வழிபாடு செய்ய அருகதையுள்ளவாவார். இந்த பிரகடனம் துவக்கமானபின் அவ்விதமாக பிரவேசித்து அல்லது தெய்வ வழிபாடு செய்தது என்ற காரணத்தைக்கொண்டு விலக்கப்பட்ட வகுப்பாரைச்சேர்ந்த எந்த நபரும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு தவறுதலையோ அல்லது குற்றத்தையோ செய்தவராகக் கருதப்படமாட்டார். அதற்காக யாதொரு தாவாவும் அல்லது குற்றச்சாட்டும் தொடரப்படக் கூடாது.

(2) இதற்குமுன் கூறியுள்ள நிபந்தனையின் பொதுத் தன்மைக்குப் பாதகமன்னியில், (1)-வது உட்பிரிவின்படி வழங்கப்பட்டிருக்கும் உரிமையில் விலக்கப்பட்டுள்ள வகுப்பாரில் சோாத ஹிந்துக்கள் பொதுவாக அநுபவித்துவரும் அளவுக்கு அடியிற்கண்ட உரிமைகளும் அடங்கியுள்ளதென்று இதன்மூலம் கூறப்படுகிறது:—

(a) கோவிலின் பிரதேசத்திற்குள் இருந்தாலும் அல்லது அதன் வெளியே இருந்தாலும் கோவிலைச்சேர்ந்ததாக உள்ள யாதொரு புனிதமான குளம், கிணறு, ஊற்று அல்லது ஜலாதாரத்தின் ஜலத்தில் ஸ்நானம் செய்யும் அல்லது ஜலத்தை உபயோகிக்கும் உரிமை;

(b) கோவிலுக்குச்செல்லுவதற்கு அவசியமானதும் குன்று அல்லது சிறு குன்று அல்லது ரஸ்தா, தெரு அல்லது நடைபாதையுள்பட எந்த புனிதமான இடத்தையும் கடந்துசெல்லும் உரிமை.

3. கவர்ன்மெண்டாரின் கட்டுப்பாட்டுக்குட்பட்டும் அவர்களால் செய்யப்படும் விதிகளுக்குட்பட்டும் ஒரு கோவிலின் டிரஸ்டியோ அல்லது சார்ஜ் வகிக்கும் மற்ற அதிகாரியோ கோவிலில் ஒழுங்கு முறையையும் மரியாதையையும் நிலைபெறச் செய்யவும் கோவிலில் நடைபெறும் மத சம்பந்தமான ஆசாரங்களையும் நடவடிக்கைகளையும் ஒழுங்காக நடத்திவரவும் உத்தரவுகள் போட அதிகாரம் பெற்றிருக்கிருர். ஆனல் அந்த உத்தரவுகள் விலக்கப்பட்ட வகுப்பாரின் மெம்பர்களைப் பொறுத்து எவ்வகையிலும் பாகுபாடு செய்யக்கூடியதாக இருக்கக்கூடாது.

4. இந்த பிரகடனத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி ஒரு ஸ்தலமானது கோவிலா, கோவில் இல்லையா என்ற பிரச்னை எழும்பொழுது,

இந்த பிரச்னை கவர்ன்மெண்டின் பரிசிலனைக்குக் கொண்டுபோகப்பட வேண்டும். அவர்களின் தீர்மானம் முடிவானதாக இருக்கும். ஆனால் கவர்ன்மெண்டாரின் முடிவு ஏற்பட்ட தேதியிலிருந்து 6-மாதங்களுக்குள் போடப்பட்ட தாவாவில் தக்க அதிகாரம் பெற்ற சிவில் கோர்ட்டினால் செய்யப்பட்ட ஒரு டிகிரிக்கு இந்த முடிவு உட்பட்டதாகும்.

5. (i) இந்த பிரகடனத்தின் மூலம் வழங்கப்பட்ட யாதொரு உரிமையையும் விலக்கப்பட்ட வகுப்பாரைச் சேர்ந்த எவரும் அனுபவிப்பதைத் தடை செய்யும், அல்லது

(ii) அவ்விதமான உரிமையை அனுபவிக்கும் ஒரு நபரைத் தொந்தரவு செய்யும் அல்லது தடங்கல் செய்யும் எந்த நபருக்கும், முதலாவது குற்றத்துக்கு, நூறு ரூபாய்களுக்கு மேற்போகாத அபராதமும், இரண்டாவது அல்லது அதற்குப்பிந்திய குற்றத்துக்கு ஆறுமாதங்களுக்கு மேற்போகாத காவல் தண்டனையும் அல்லது ஐநூறு ரூபாய்களுக்கு மேற்போகாத அபராதமும் அல்லது இவ்விரண்டும் விதிக்கத்தக்கதாகும்.

6. பொதுவாக கோவில்கள் சம்பந்தமாகவும் அல்லது யாதொரு கோவில் அல்லது கோவில்கள் வகை சம்பந்தமாகவும் இந்த பிரகடனத்தின் ஷரத்துக்களை அன்வயப்படுத்துவதற்காக கவர்ன்மெண்டார் விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தப் பிரிவின்படி செய்யப்படும் விதிகள் புதுக்கோட்டை கெஜெட்டில் பிரசுரிக்கப்படும். அவ்விதம் பிரசுரிக்கப்பட்டமேல் அவைகள் இந்த பிரகடனத்தில் இயற்றப்பட்டிருப்பதுபோல செலாவணியாகும்.

7. இந்த பிரகடனத்தின் ஷரத்துக்களை அன்வயப்படுத்துவதில் யாதாவது சிரமம் ஏற்பட்டால் சந்தர்ப்பத்துக் கேற்றவாறு, சிரமத்தை நிவர்த்தி செய்வதற்காக அவசியமாகத் தோன்றும் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளும்படி கவர்ன்மெண்டார் உத்தரவிடலாம்.

புது அரண்மனை,
புதுக்கோட்டை,
1948-ம் ஞு பிப்ரவரி மீ 6உ.

ராஜகோபாலத் தொண்டைமான்,
புதுக்கோட்டை ஸமஸ்தான மன்னர்.

குறிப்பு.—இந்த பிரகடனத்தில் கண்டவைகள் போன்ற குறைபாடுகளை அகற்றுவதற்காக தளராமல் பாடுபட்ட மஹாத்மா காந்தியடிகளின் ஞாபகார்த்த புனித தினங்களிலொன்றில் ஆலயப் பிரவேச பிரகடனம் அமுலுக்கு வரவேண்டுமென்று மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அவர்கள் விரும்பி அந்த தினம் மஹாத்மா காந்தியடிகளின் உத்திரக்கிரியை கடைசி தினமாகிய 1948-ம் ஞு பிப்ரவரி மீ 12உயாக கணிகூர்ந்து நிர்ணயித்திருக்கிறார்கள்.

சமஸ்தான உணவு நிலைமை.

1947-ம் ஞூ டிசம்பர் 2-வது பக்ஷத்தியது.

I

1. சீதோஷ்ண ஸ்திதியும் பயிர் நிலையும் :—மாறுதலில்லை. ஆனால் பிரஸ்தாப பக்ஷத்தில் சிறு தூற்றல்கள் பெய்தது.

2. தானிய இருப்பு வகையரா :—மாறுதல் இல்லை. ஆனால் இந்த பக்ஷ ஆரம்பத்தில் உணவு தானிய இருப்பு 179·3 டன்கள் ஆகும். அதில் 161·4 டன்கள் அரிசி ஆகும். முந்திய 4 வாரத்து செலவு திட்டப் படி கணக்கிட்டால் கையிருப்பு அரிசி நான்கு நாளைய பங்கீட்டுக்குக் காணலாம். இப்பால் மதராஸ் கவர்ன்மெண்டார் 1948-ம் ஞூ ஜனவரி மாதத்திற்கு 200 டன்கள் அரிசியும், 300 டன்கள் மக்கா சோளமும் நம் சமஸ்தானத்திற்கு ஒதுக்கி உள்ளார்கள். சேகரிக் கப்பட்ட உணவு தானியங்களை, மொத்த வியாபாரிகளிடமும், சில்லரை வியாபாரிகளிடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர் களால் சேகரிக்க முடிந்த தானியங்களை வாங்குவதற்கு அனுமதிக் கப்பட்டிருக்கிறார்கள். அவ்விதம் வாங்கப்பட்ட தானியத் திற்கு, பங்கீட்டு கார்டு உள்ளவர்களுக்கு பூராவாகவாவது, பாகமாக வாவது விற்றதற்கும், ரேஷன் கடைகளுக்கு விற்றதற்கும், கையிருப்பு தானியத்திற்கும் வாரந்திரக் கணக்கு கொடுக்க வேண்டியது.

3. விலை விபரம்;—மாறுதல் இல்லை. ஆனால் கிராமங்களில் உணவு பங்கீட்டு முறையை எடுத்ததிலிருந்து உணவு தானியங்களின் விலை உயர்ந்து விட்டது.

4. சேகரிப்பும் மேற்பார்வையும் சேமித்து வைத்தலும் :—மாறுதல் இல்லை.

5. போக்குவரத்து :—மாறுதல் இல்லை.

6. பங்கீடும், ஊண் சத்தும் :—மாறுதல் இல்லை.

7. உணவு பதார்த்தங்கள் செய்யும் எண்ணெயும், எண்ணெ வித்துக்களும் புண்ணாக்குகளும் :—குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஒன்றும் இல்லை.

8. பொதுவான விஷயங்கள் :—இப்பக்ஷத்தின் கடைசியில் கையிருப்பு அரிசி (வழக்கப்படி உள்ள கணக்கு விகிதப்படி) மூன்று நாளைய பங்கீட்டிற்கு போதுமானது.

II

1948-ம் ஞூ ஜனவரி மாதம் முதல் பக்ஷத்தியது.

1. சீதோஷ்ண ஸ்திதியும், பயிர் நிலையும் :—மாறுதல் இல்லை. ஆனால் மழையின்மையால் அநேகமாக எல்லா பயிர்களும் காய்ந்துவிட்டன.

2. தானிய இருப்பு வகையறா :—மாறுதல் இல்லை. ஆனால் இந்த பஸலி ஆரம்பத்தில் உணவு தான்ய இருப்பு 123·5 டன்கள் ஆகும். அதில் 122·5 டன்கள் அரிசியாகும். முந்திய நான்கு வாரத்திய செலவு திட்டப்படி கணக்கிட்டால் கையிருப்பு அரிசி சுமாராக 3 நாளைய பங்கீட்டிற்குக் காணலாம். நியாயமான விலைக்கு விற்பனை செய்வதற்காக திருமயம் தாலூகாவில் ஒன்றும், குளத்தூர் தாலூகாவில் ஒன்றும், ஆலங்குடி தாலூகாவில் இரண்டும், ஆக நான்கு கடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. 1948-ம் வருஷம் ஜனவரி மாதத்திற்கு 200 டன்கள் அரிசியும் 300 டன்கள் சோளமும் மதராஸ் கவர்ன்மெண்டார் நமது சமஸ்தானத்திற்கு ஒதுக்கியுள்ளார்கள்.

3. விலை விபரம் :—
4. சேகரிப்பும் மேற்பார்வையும் சேமித்து வைத்தலும் :—
5. போக்குவரத்து :—
6. பங்கீடும் ஊண் சத்தும் :—
7. உணவுபதார்த்தங்கள்செய்யும் எண்ணையும், எண்ணை வித்துக்களும், புண்ணாக்குகளும்.

(3 முதல் 7 வரை) குறிப்பிடத்தக்க மாறுதல்கள் இல்லை.

8. பொதுவான விஷயங்கள் :—இப்பஸலியின் முடிவில் அரிசி கையிருப்பு டவுனிற்கு மாத்திரம் நான்கு நாளைய பங்கீட்டிற்குப் போதுமானதாயிருந்தது.

"பசுந்தாள் எருப்பயிர்களும், பச்சிலை உரங்களும்"

(*By G. Doraiswami Ayyangar*).

மண்வளம், குடிவளம், ஜலவசதி, முதலியவைக் கவனித்து விவசாயிகள் பொருத்தமான நெல் ரகங்களை பயிரிட்டால் பூர்ண பலனைப் பெறலாம். காலம் மாறுதலடையும்பொழுது தங்கள் விவசாய பழக்கங்களும் மாறுதல் அடைந்தால்தான் வேளாண்மை, லாபகரமாயிருக்கும். ஜலவசதி குறைவாக தென்படும்பொழுது குறுகிய சம்பாப் பயிர்களை சாகுபடி செய்ய வேண்டியதாகும். ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது. சாகுபடி செய்யக்கூடிய நிலமும் குறைவுபட்டு வருகிறது. தேசத்திற்கு வேண்டிய உணவு தானியங்களை உற்பத்தி செய்யவேணுமென்றால், தொன்று தொட்டு வழங்கி வரும் விவசாய முறைகள், மழைக்குறைவான காலத்திலும், முன்போல் மாசூலைத்தருமென்று எதிர்பார்ப்பது உசிதமல்ல.

இவ்விடத்தில் செழிப்பான பூமி, சௌகரியங்கள் பொருந்திய, காலத்திலே ஏக்கர் ஒன்றுக்கு 25 கலம் கண்டு முதல் கொடுத்ததாகத் தெரிகிறது. ஆனால் நெல் ஆராய்ச்சி பண்ணைகளில் இப்பொழுது தகுந்த படி சாகுபடி செய்தால், 40 கலம் விகிதம் மாசூல் பெறலாமென்றும் தெரிகிறது. ஆனதால் இவ்விடத்திலும், குறைந்த கண்டு முதலுக்கு காரணங்களை உணர்ந்து சீர்படுத்திய முறைகளை விவசாயிகள் கையாள வேணுமென்று கோருகிறேன். பெரும்பாலும், நிலத்திற்கு எரு போடாமலே வருஷந்தோறும் சாகுபடி செய்கிற பழக்கம் மாறுதல் அடைய வேண்டும். சாகுபடி செய்கிற நிலம் பூராவுக்கும், தாவரவர்க்கம், கால்நடை, மனிதவர்க்கம், கழிக்கிற எரு போதாது என்று சொல்லி பிரயாசை எடுத்துக்கொள்ளாமலிருப்பது முறையல்ல. நஞ்சை மண் சோதிக்கப் பட்டதால், தழை சத்தும், தான்யசத்தும் தகுந்தயளவு திருப்பிக் கொடுத் தால் நெல் மாசூல் அதிகரிக்ககூடுமென்று தெரிகிறது. பூமியிலிருந்து நெற் பயிர் விளைவினால் எடுத்துக்கொண்ட பயிருணவுப்பொருள்கள், திரும்பவும் பூமிக்கு எருக்கள் மூலமாக திருப்பிக் கொடுக்கவேண்டும். விவசாயிகள் உரம் செய்வதில் தளர்ச்சியடையாமல், கிராமத்துக்குத்தகுந்தபடி தான்யதழை சத்துக்கள் அடங்கிய எருக்களை லேசாய் அடைய பிரயாசைப்படவேண்டும் ஒவ்வொரு மாசூலிலும் சராசரி, 48 ராத்தல் தழை சத்து, (நைட்ரோஜன்) 23 ராத்தல் தான்யசத்து (பாஸ்பாரிக் ஆஸிட்), 41 ராத்தல் சாம்பல் கார சத்து (பொட்டாஸ்) பயிருணவுப்பொருள்கள், மண்ணிலிருந்து நீக்கப்படு கின்றன. இதை பச்சிலை உரம் அல்லது பசுந்தாள் உரப்பயிர்கள் மூலமாக ஈடு செய்தால், மண் வளம் குன்றாமல் மாசூல் திருப்திகரமாய் கிடைக்கு மென்று தெரிகிறது. அனுபோகத்திலும் இந்த உரவகைகள் மாசூலை அதிகரிக்கச்செய்கிறதென்றும் தெரிகிறது. பசுந்தாள் எருப்பயிர்களில், கொழுஞ்சி, அவுரி, தக்கைப்பூண்டு, சணல், துவரை, பில்லுப்பயறு பெயர் போனவை. மணல் சாரியான பூமிக்கு கொழுஞ்சி அவுரியும், களர் நிலத் துக்கு தக்கைப்பூண்டும் மற்றவைகளுக்கு சணல் பில்லுப்பயறு பொருத்த மானதாகும். நஞ்சை பூமிகளிலே பயிரிட்டு, பூக்கும் தருவாயில் வெட்டி மக்க வைப்பது முறை. செழிப்பமாய் வளர்ந்தால் ஒரு ஏக்கரில் உற்பத்தி யாகிறது. 2 ஏக்கருக்கு உபயோகப்படும் ஏக்கர் 1-க்கு சுமார் 4000 தழை கொடுக்கவேணுமென்று தெரிகிறது.

காடுகள், புறம்போக்கு உள்ளவர்கள் ஆவாரை, புங்கம், விருவி, எருக் கம் போன்ற தழைகளை வாங்கி உபயோகிப்பதில், நல்ல வருமானத்தை அடையலாம். இவை இரண்டும் கிடைக்காத இடங்களுக்கு, கால்நடை மனிதர் வர்க்கம், கழிவுப்பொருள்களுடன், முனிஸிபாலிட்டி குப்பை, தோல்கழிவு, கசாப்புக் கழிவு, களைகள், பூண்டுகள், கடலைத்தோல், உதிர்ந்த

இலைகள் போன்றவைகளை சேகரம் செய்து மக்கவைத்து, நிலத்திற்கு இந்திரிய வஸ்து எருக்கள் அதிகரிக்கும்படி பாடுபடவேண்டும்.

விவசாயிகள் ஒன்றுகூடி, பசுந்தாள் எருப்பயிர்களாகிய, கொழுஞ்சி, அவுரி, தக்கைப்பூண்டு, பில்லுப்பயறு போன்றதை இங்கு சாகுபடி செய்து தகுந்தயளவு எரு சேகரம் செய்யவேண்டுமாறு கோரப்படுகிறார்கள். அதற்கு தகுந்த பட்டம் இதுதான். தேவையுள்ளவர்கள்; விவசாய சங்கங்கள் மூலமாக, விதைகளைப்பெற்று, சாகுபடி முறைகளை விவசாய ஆபீஸர்களிடமிருந்து தெரிந்து, பயிரிட்டு நிலவளத்தை பாதுகாப்பதில் ஈடுபட்டால், தற்போதுள்ள உணவு நெருக்கடியை சமாளிக்கக்கூடும்.

ஆசிரியர்கள்,

(வித்வான். விசு. திருநாவுக்கரசு Ranee's Girls High School).

[காரையூர் ஆரம்ப ஆசிரியர்கள் சங்கத்தின் 29-ம் ஆண்டு விழாவில் ஸமஸ்தான கல்வி இலாகாத் தலைவர் ஸ்ரீ வேங்கடராமய்யர் B. A., L T., M. R., A S., அவர்கள் தலைமையில் செய்த பிரசங்கத்தின் சுருக்கம்.]

"இந்த ஆரம்ப ஆசிரியர்கள் சங்கமானது சென்ற 29 ஆண்டுகளாக பணியாற்றிவரும் செய்தி எல்லோருக்கும் மகிழ்ச்சிதரக்கூடியதாகும். என்னைப்பார்க்கிலும் உங்கள் சங்கம் பருவத்தால் மூன்று ஆண்டுகள் முதிர்ந்தது என அறிகிறேன். மனித வாழ்வில் 60 ஆண்டுகள் கழிந்தால் அதை மிக முதிர்ந்த பருவமாகக் கருதுகிறோம். சிறப்பாக விழாச் செய்கிறோம். அதேபோல சங்கங்களின் பருவத்தில் 25 ஆண்டுகள் சென்றால் முதிர்ந்த பருவமாகக் கருதி விழாச் செய்வது சிறப்பான இயல்பாகும். உங்கள் சங்கம் 25-ம் பருவத்தைக் கடந்து நான்கு ஆண்டுகள் சென்று விட்டன. இதனுடைய எதிர்காலம் சிறக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

தொழில்களிலே மிகச் சிறப்பும் அறநெறியும் வாய்ந்தது ஆசிரியத் தொழிலேயாகும். இந்தத் தொழிலுக்கு சிறப்பிடம் கொடுத்த நாடு, இந்த நாடு. எழுத்தைக் கற்பிக்கும் நீங்கள் இறைவனுக்குச் சமானமாகிறீர்கள். நீங்கள் நாளும் கற்பித்துவரும் 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்ற பழந்தமிழ்த் தொடரை இப்போது நினைவுபடுத்துகிறேன். இளஞ் சிறுவர் சுவடி எடுத்துச் சொல்லுங்கால் 'குருவாழ்க' 'குருவேதுணை' என்று மழலை மாறாத சொற்களில் சொல்லித் தொடங்குவது உங்கள் தொழிலுக்குச் செய்கின்ற சிறப்பாகும். 'குருவாழ்க' 'குருவேதுணை' என்று சொல்லி ஏடு பிடித்தவர்கள்தான் மந்திரிகளும் மற்றவர்களுமாவர். இதைப்பார்க்கிலும் உங்கள் தொழிலுக்கு வாத்தக்க பெருமை என்ன ?

உங்கள் மாபில் வந்தவர்கள்தான் புராதனமான காலத்தில் வாழ்ந்த மகரிஷிகளும் மற்றவர்களும். தமிழியலில் மகத்தான பெருமைக்குரியவர் அகத்திய முனிவர். அவருக்குப் பன்னிரண்டு மாணுக்கர்கள் உண்டு. அவர்களில் ஒருவர் தொல்காப்பியர். அகத்தியரையும் தொல்காப்பியரையும் பரம்பரையாகக்கொண்டு ஆசிரியர் குலம் தமிழ் நாட்டில் வளர்ந்து வந்திருக்கிறது. அவர்கள் மேற்கொண்ட புனிதமான தொழிலை நீங்கள் மேற்கொண்டிருக்கிறீர்கள். பள்ளி ஆசிரியராயிருந்து உலகப் புகழ்பெற்ற V. S. சீனிவாச சாஸ்திரியார் உங்கள் குலத்தைச் சேர்ந்தவர் என நினைத்து மகிழ இடமுண்டு. இதையன்றி மற்றெரு சிறப்பான செய்தியைக் குறிப்பிட விரும்புகிறேன். தென்னுப்பிரிக்காவில் உத்தமர் மகாத்மா காந்தியடிகள் சில வருஷ காலம் ஆசிரியராய் இருந்திருக்கிறார். அதிலும் சிறப்பாக தமிழாசிரியராக இருந்திருக்கிறார். இதை நினைக்கின்றபோதெல்லாம் நான் பெருமை அடைகிறேன். அவரே கூறுகிறார்.

'நான் தமிழும், உருதுவும் போதிக்க முன் வந்தேன். எனக்குத் தெரிந்த மிகவும் குறைந்த தமிழறிவு நான் கடற்பயணம் செய்த நாட்களிலும், சிறை வாசத்திலும் தேடிக்கொண்டதாகும். போப்பையர் இயற்றிய அழகிய தமிழ்ப்புத்தகத்திற்கு மேல் நான் பயிற்சிபெறவில்லை...... இந்த அளவிலுள்ள கைம் முதலைக்கொண்டு நான் என் வியாபாரம் தொடங்க வேண்டியதாயிற்று.........தமிழ்ச் சிறுவர் எல்லோரும் தென்னுப்பிரிக்காவில் பிறந்தவர்களேயாதலால் மிகச்சிறிதளவே தமிழறிவு பெற்றிருந்தனர். அம்மொழியின் வரிவடிவம் அவர்கட்கு தெரியவில்லை. ஆதலின் நான் அவர்கட்கு தமிழ் நெடுங் கணக்கைப்பற்றி ஆரம்ப இலக்கணமும் போதித்தேன்'.

இவையனைத்தும் காந்தியடிகளின் பொன்னுன எழுத்துக்கள். இத்தகைய ஆசிரியத்தொழிலை மேற்கொண்டுள்ளவர்கள் வாழ்க்கையில் ஏணிகளாய் இருந்து வருகிறார்கள். தாம் ஏணியைப்போலிருந்து மற்றவர்களை ஏற்றிவிடுகிறார்கள்.

தெய்வபக்தி, நாட்டன்பு, மொழிப்பற்று என்னும் அரிய பண்புகளை மாணவர்களிடம் ஆசிரியர்கள் வளர்க்கவேண்டும். ஒரு நாட்டைச் சிறப்பான நிலைக்குக்கொண்டுவரும் மகத்தான பொறுப்பு ஆசிரியர்களிடந்தானிருக்கிறது. ஆசிரியர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைவதற்கான அறிகுறிகள் நாட்டில் காணப்படுகின்றன. இவைகளை அறிந்து பொறுமை மேற்கொண்டு தங்களை நோக்கி நிற்கும் மகத்தான எதிர் காலத்தை அறிந்து ஆசிரியர்கள் வாழவேண்டுகிறேன்.

அகதிகளுக்கு கம்பள ஆடைகள்.

வட இந்தியாவில் குளிர்காலம் நெருங்குவதால், அகதிகள் கஷ்ட நிவாரண மந்திரி சபையார் பல்வேறு முகாமிலுள்ள அகதிகளுக்காக, ஆடைகளை, முக்கியமாக அகதிகளுக்கு உடனடியாகத் தேவையான கம்பள ஆடைகளைச் சேகரித்துத் தரும் திட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

மாகாணங்களையும், சமஸ்தானங்களையும் இதே விதமாக கம்பள ஆடைகளை உடனடியாகச் சேகரிக்க ஏற்பாடு செய்யும்படியும், மந்திரி சபையார் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஸமஸ்தானத்திலுள்ள எல்லா பொது கல இயக்கங்களும், பொது மக்களும், காங்கிரஸ் கமிட்டிகளும், சாரணர் கூட்டங்களும், ஆடைகளைச் சேகரிப்பதில் ஒத்துழைக்கும்படியும், அவர்களால் முடிந்தவரை துணிகளைச் சேகரித்து தாசில்தாரிடம் ஒப்புவிக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அவ்விதம் ஒப்புவிக்கப்பட்ட துணிகளை தாசில்தார் அகதிகள் கஷ்ட நிவாரண மந்திரி சபைக்கு அனுப்புவதற்காக திவான் பேஷ்காரிடம் கொடுப்பார்கள். இந்த வேண்டுகோளுக்கு பொதுமக்கள் உதவி அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கொச்சின் சமஸ்தானத்துடன் உடன்பாடு

சென்ற மகாயுத்தத்தில் பங்கெடுத்துக்கொண்டு தற்காப்பு சேவையில் ஈடுபட்டவர்களின் குழந்தைகளுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும், கல்வி உதவி அளிக்கப்படுவதைப்பற்றி கொச்சின் கவர்ன்மெண்டார் புதுக்கோட்டை தர்பாரவர்களுடன் ஒரு உடன்பாட்டிற்கு இணங்கியிருக்கிறார்கள். அந்த உடன்பாடு இந்தியா கவர்ன்மெண்டாரால் தயாரிக்கப்பட்ட திட்டத்தை ஒட்டி இருக்கிறது.

அந்த உடன்பாட்டின்படி, புதுக்கோட்டை சமஸ்தான பள்ளிக்கூடங்களில் படித்துவரும் கொச்சின் சமஸ்தான மாணவர்கள், 1—10—47 முதல் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் கிடைக்கக்கூடிய அளவிற்கு கல்வி பயில உதவியளிக்கப்படுவார்கள். ஆனால் அவர்கள் கொச்சின் சமஸ்தானத்தில் உதவிபெற அருகதையுள்ளவர்களாக இருக்கவேண்டும். தாங்கள் அருகதை உள்ளவர்கள் என்பதற்கு கொச்சின் கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களிடமிருந்து நற்சாக்ஷி பத்திரம் தாக்கல் செய்யவேண்டும்.

மேற்கண்ட விதமாக கொச்சின் சமஸ்தான பள்ளிக்கூடங்களில் படித்து வரும் புதுக்கோட்டை சமஸ்தான மாணவர்கள், 1—10—47 முதல் கொச்சின் சமஸ்தானத்தில் கிடைக்கக்கூடிய அளவிற்கு கல்வி பயில உதவி அளிக்கப்படுவார்கள்.

நில சர்வே பள்ளிக்கூடத்தைப்பற்றிய குறிப்பு

ஸ்ரீ-தர்பாரவர்கள் நில தஸ்தாவேஜுகளை பாதுகாக்கும் வேலையையும், நகரத்தைத் திரும்ப சர்வே செய்யும் வேலையையும், ஆரம்பிக்கப் போகிறார் கள். சர்வே வேலைக்குப் பயின்ற போதுமான ஆட்கள் இல்லாததால், உள்ளூரில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 4—2—48வயிலிருந்து 20-பேர்களுடன் ஒரு சர்வே பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படிப்புத்திட்டம் 4-மாத காலம் நீடிக்கும். மதராஸ் சர்வே இலாகாவில் பயிற்சி பெற்ற ஓர் உத்தியோகஸ்தரால் இப்பள்ளிக்கூடம் நடத்தப்பட்டு வருகிறது. உத்தியோகத்திலுள்ளவர்களும், தனிப்பட்டவர்களும் இப் பள்ளிக்கூடத்தில் இருக்கிறார்கள். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு பயிற்சி காலத்தில், வேலையில் இருப்பதாகக் கருதி, அவர்களது சம்பளத்தை கொடுக்கப்படும். தனிப்பட்டவர்கள், ஏற்படும் செலவை அவர்களே ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். எல்லா மாணுக்கர்களையும், குறைந்தது 3வருட-காலம் சமஸ்தானத்திலேயே சர்வேயர்களாக வேலை பார்க்கவேண்டும் என்று ஒரு ஒப்பந்தம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. வகுப்புகள் நில தஸ்தாவேஜுகள் ஆபீஸில் நடக்கிறது.

கெஜட்டுச் செய்திகள்.

சட்ட சபையின் நிதிக் கமிட்டியின் அமைப்பும், வேலை திட்டமும் பற்றிய விதிகளின்படி 1947—48-ம்வருஷத்திற்கு சட்ட சபை நிதிக் கமிட்டிக்கு அடியிற்கண்ட அங்கத்தினர்களை ஸ்ரீ-தர்பாரவர்கள் களிகூர்ந்து நியமனம் செய்துள்ளார்கள்.

1. M. R. Ry. C. கருணாகர மேனன் அவர்கள், B. A., திவான்.
2. ,, S. வெங்கடேஸ்வர அய்யர் அவர்கள், B. A., திவான் பேஷ்கார், M. L. C.
3. ,, H. நடராஜ சாஸ்திரிகள் அவர்கள், B. E., ஸ்டேட் இஞ்சினியர், M. L. C.
4. ,, A. சிவசாமி ராங்கியர் அவர்கள், M. L. C.
5. ,, M. Kr. Rm. ராமஸ்வாமி செட்டியார் அவர்கள், M.L.C.
6. ,, T. கருத்தாக் கவண்டர் அவர்கள், M. L. C.

* * * * *

1948-ம்வருஷ பிப்ரவரிமீ 3-ம் தேதியிலிருந்து 'மில் துணிகளை' ரேஷன் பொருள்கள் ஜாபிதாவிலிருந்து ஸ்ரீ-தர்பார் அவர்கள் களிகூர்ந்து நீக்கியிருக்கிறார்கள்.

* * * * *

புதுக்கோட்டை சமஸ்தானத்திலிருந்து இந்தியா டொமினியனுக்கு பனங்கைகள், பனைமரம் வகையரா ஏற்றி அனுப்ப பர்மிட்டுக்கு மனுச் செய்து கொள்பவர்கள், அனுப்பவேண்டிய மரங்களின் சைஸ் (அளவு) நீளம், சுமார் எடை, எந்தெந்த ஊர்களுக்கு அனுப்பவேண்டும், மனுச் செய்து கொள்ளும் காலத்தில் தன்னிடமுள்ள ஸ்டாக் எவ்வளவு என்ற விவரம் கண்டு மனுச்செய்து கொள்ளவேண்டும்.

மேற்படி விவரங்கள் காணுமல் கொடுக்கப்படும் மனுக்கள் கவனிக்கப் படமாட்டாது.

1931-ம் வருஷத்திய கால்நடை வியாதி சம்பந்தமான 1-வது ரெகுலேஷன், 1-வது பிரிவுப்படி, இந்த ரெகுலேஷன் சமஸ்தானம் பூராவும் 6-மாத காலத்திற்கு அன்வயிக்கும் என்று ஈ-தர்பாரவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

மேற்படி ரெகுலேஷன் 18-வது பிரிவுப்படி கீழே கூறியுள்ளவற்றை ஓர் விதியாக விடுத்துள்ளார்கள்.

"தொத்து வியாதியினால் இறந்தது என்று தெரிந்தாலும், நம்புவதற்கு ஹேதுவிருந்தாலும், அவ்வாறு இறந்த மிருகத்தின் பிணத்தை யாதொருவரும் திறந்தவெளியில் போடவாவது அல்லது போடும்படி செய்யவாவது கூடாது."

ஸமஸ்தான பங்கீட்டு விதிகளின்படி தண்டனை அடைந்தவர்கள் விபரம்.

I. திருமயம் தாலூகா.

1. கோனாபட்டு மீனாக்ஷி ரைஸ்மில் லைசென்ஸ்தார் சுப்பிரமணியன் செட்டியார், பர்மிட் இல்லாமல் நெல் அறைத்த குற்றத்திற்காக அபராதம் ரூ 100.
2. லக்ஷ்மணன் செட்டியார் பனங்குடி வட்டம், காடத்தாம்பட்டி கிராமத்தில் உத்தரவு இல்லாமல் அறுவடை செய்ததற்கும், பர்மிட் இல்லாமல் நெல் ஏற்றுமதி செய்ததற்கும் அபராதம் ரூ 30.

II. குளத்தூர் தாலூகா.

1. வெம்பனூர் ஏழுமலை சேர்வை பர்மிட் இல்லாமல் நெல் ஏற்றுமதி செய்ததற்காக அபராதம் ரூ 100.
2. வலையபட்டி ஆண்டிக்கவுண்டர் உத்தாவில்லாமல் சோளத்தை அறுவடை செய்ததற்கும், ஏற்றுமதி செய்ததற்கும் அபராதம் ரூ 30.

III. ஆலங்குடி தாலூகா.

1. திருவரங்குளம் தங்கவேலுச் செட்டியார் இட்டலி விற்ற குற்றத்திற்காக அபராதம் ரூ 15.
2. கல்லாலங்குடி தனலெக்ஷ்மி ரைஸ்மில் லைசென்ஸ்தார் P. Rm. ரெங்கன் செட்டியார் பர்மிட் இல்லாமல் நெல் அறைத்த குற்றத்திற்காக அபராதம் ரூ 50
3. மேற்படி மில் மானேஜர் K. முருகன் செட்டியார் அதே குற்றத்திற்காக அபராதம் ரூ 50.
4. கரம்பக்குடி யூசுப் ராவுத்தர் பர்மிட் இல்லாமல் நெல் எடுத்துச் சென்றதால் அபராதம் ரூ 20.
5. காம்பக்குடி தங்கவேலு மல்லவாார் அதே குற்றத்திற்காக அபராதம் ரூ 20.
6. அதிரான்விடுதி முத்துச்சாமி சேத்துரான் மண்ணெண்ணெயை அதிக விலைக்கு விற்ற குற்றத்திற்காக அபராதம் ரூ 40.

IV. புதுக்கோட்டை டவுன்.

1. டவுன் ரெங்காமில் புரோப்ரைட்டர் குமரப்ப செட்டியார் கணக்கு வைத்துக்கொள்ளாத குற்றத்திற்காக அபராதம் ரூ 20.
2. டவுன் சரவண பிள்ளை மண்ணெண்ணெயை அதிக லாபகரமான விலைக்கு விற்றதால் அபராதம் ரூ 30.
3. டவுன் சுப்பையா பிள்ளை அதே குற்றத்திற்காக அபராதம் ரூ 10.

Sri Brihadamba State Press, Pudukkottai. 850—19-2-48.

வந்தேமாதரம் ! ஜெய் ஹிந்த் !!

Raja Soap Works

நாகரீக உலகத்தில் மங்கையும், மகனும்
விரும்புவது தூய ஆடை

(காரணம்)
"சுத்தம் சோறுபோடும்
சுத்தமே சுகம் தரும்"

அச்சுத்தமே
கடவுளுக்கு அடுத்தபடி மதிக்கவேண்டிய விஷயமும் ஆகும்.

இவைகளைப் பூர்த்திசெய்வது

"ராஜா சோப் ஒர்க்ஸின்"
"கங்கை பார் சோப்புகள்"

818 கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

Published by the Publicity Officer, Pudukkottai State. Printed at the Sri Brihadamba State Press, Pudukkottai. All communications should be addressed to the Publicity Officer, Pudukkottai.